**செய்தி வெளியீடு எண் : 847** **நாள்: 26.05.2022**

**மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் ரூ.31,500 கோடி மதிப்பீட்டிலான திட்டப் பணிகளை மாண்புமிகு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இன்று (26.5.2022) சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் முன்னிலையில், பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் சென்னை, பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் முன்மாதிரி வீட்டு வசதி திட்டமான லைட் ஹவுஸ் திட்டத்தில் ரூ.116.37 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 1152 குடியிருப்புகளை திறந்து வைத்தார். மேலும், ரூ.28,553 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயணிகளின் பயன்பாட்டிற்காக ரூ. 1,104 கோடி செலவிலான இரயில்வே திட்டப் பணிகளையும், ரூ.1,760 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற இயற்கை எரிவாயு குழாய் பதிக்கும் பணியினையும் தொடங்கி வைத்தார்.

**<u>பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் முன்மாதிரி வீட்டுவசதி திட்டமான லைட் ஹவுஸ் திட்டம்</u>**

பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காகவும், ஆட்சேபகரமான திட்டப்பகுதியில் வசிப்பவர்களுக்காகவும், பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் உலகளாவிய புதிய வீட்டுவசதி தொழில்நுட்பமான PreCast Technology–ல் வடிவமைக்கப்பட்ட லைட் ஹவுஸ் திட்டத்தில் அனைத்து வசதிகளுடன் ரூ.116.37 கோடி செலவில் 1152 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது.

இந்த முன்மாதிரி வீட்டு வசதி திட்டத்தில் தலா 96 குடியிருப்புகள் கொண்ட 12 கட்டடத் தொகுப்புகளில் தரைத்தளம் மற்றும் ஐந்து தளங்களாக கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டடத் தொகுப்புகளிலும் இரண்டு மின்தூக்கி வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தளம், சூரியமின்

உற்பத்தி, மேல்நிலை தண்ணீர் தொட்டி ஆகியன அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு குடியிருப்பும் தலா 406 சதுர அடி பரப்பளவில், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையலறை, குளியலறை மற்றும் கழிவறை ஆகியவற்றை கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தை செயல்படுத்த ஒவ்வொரு குடியிருப்பிற்கும் ஒன்றிய அரசின் மானியம் ரூ.5.50 இலட்சமும், மாநில அரசின் மானியம் 3 இலட்சத்து 50 ஆயிரத்து 500 ரூபாய், பயனாளிகளின் பங்களிப்புத் தொகை ரூ.1.50 இலட்சம், என மொத்தம் குடியிருப்பு ஒன்றிற்கு 10 இலட்சத்து 50 ஆயிரத்து 500 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டப்பகுதியில் ஒவ்வொரு கட்டடத் தொகுப்புகளுக்கும் பாதாள சாக்கடை வசதி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு மறுசுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்த வசதி, மூன்று கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், புதைவட மின் கம்பிகள் மூலம் மின் இணைப்பு, இருசக்கர வாகன நிறுத்தங்கள், நூலகம், நியாயவிலைக் கடை, அங்கன்வாடி மையம், ஆவின் பாலகம், பூங்காக்கள், மின்தூக்கி வசதி, சுற்றுச்சுவர், தெரு விளக்குகள் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

**<u>அடிக்கல் நாட்டப்பட்டுள்ள புதிய திட்டப் பணிகளின் விவரங்கள்</u>**

ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வாயிலாக, சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரையிலான 20.565 கி.மீ. நீளத்திற்கு ரூ.5,855 கோடி மதிப்பில் இரண்டு அடுக்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி;

ரூ.14,872 கோடி மதிப்பீட்டில் பெங்களூர் – சென்னை நான்கு வழி எக்ஸ்பிரஸ் சாலை;

சென்னையில் ரூ.1,428 கோடி மதிப்பீட்டில் பல்முனையச் சரக்குப் போக்குவரத்துப் பூங்கா (Multi–Modal Logistics Park);

ரூ.3,871 கோடி மதிப்பீட்டில் நெரலூருவிலிருந்து தருமபுரி வரை நான்கு வழிச்சாலை;

ரூ.724 கோடி மதிப்பீட்டில் மீன்சுருட்டி – சிதம்பரம் இரண்டு / நான்கு வழிச்சாலை;

எழும்பூர், ராமேஸ்வரம், மதுரை, காட்பாடி மற்றும் கன்னியாகுமரி இரயில் நிலையங்களை ரூ.1,803 கோடி மதிப்பீட்டில் மறுமேம்பாட்டுப் பணி;

என மொத்தம் ரூ.28,553 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**இந்திய இரயில்வே துறையில் பயணிகளின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்ட முடிவுற்ற திட்டப் பணிகளின் விவரங்கள்**

தாம்பரம் – செங்கல்பட்டு இடையே ரூ. 598 கோடி செலவில் 30 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள மூன்றாவது ரயில் பாதை;

மதுரை – தேனி இடையே 75 கி.மீ. நீளமுள்ள மீட்டர் கேஜ் இரயில் பாதையை ரூ. 506 கோடி செலவில் அகல ரயில் பாதையாக மாற்றியமைக்கும் பணி;

என மொத்தம் ரூ. 1,104 கோடி செலவிலான இரயில்வே திட்டப் பணிகளை பயணிகளின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் அர்ப்பணித்தார்.

**ஒன்றிய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் சார்பில் முடிவுற்ற இயற்கை எரிவாயு குழாய்கள் பதிக்கப்பட்டுள்ள பணிகளின் விவரங்கள்**

எண்ணூர் – செங்கல்பட்டு பிரிவில் 115 கி.மீ. நீளத்திற்கு ரூ.849 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற இயற்கை எரிவாயு குழாய்கள் பதிக்கும் பணி;

திருவள்ளூர் – பெங்களூரு பிரிவில் 271 கி.மீ. நீளத்திற்கு ரூ.911 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற இயற்கை எரிவாயு குழாய்கள் பதிக்கும் பணி;

என மொத்தம் ரூ.1,760 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற குழாய்கள் பதிக்கும் பணியினை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த விழாவில், காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி, மாண்புமிகு பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, வீட்டுவசதி

மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.ஹர்தீப்சிங் பூரி, மாண்புமிகு சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் திரு. வி.கே.சிங் ஆகியோரும், சென்னையில், மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை, பால்வளம் மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு. எல்.முருகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அரசு துறைச் செயலாளர்கள், ஒன்றிய அரசின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in